16. தமிழுக்கும் எந்த மலைக்கும் தொடர்பு அதிகம் என்று கூறுகிறது தமிழ்விடு தூது?

(a) இமய மலை (b) யானை மலை

(c) பொதிகை மலை (d) திருவண்ணாமலை

17. பின்வருபவற்றுள் திரிகூட ராசப்பக் கவிராயர் பாடாத நூல் எது?

(a) திருக்குற்றாலக் குறவஞ்சி

(b) திருக்குற்றால நாதர் ஊடல்

(c) திருக்குற்றாலநாதர் ஊஞ்சல்

(d) திருக்குற்றால நன்னகர் வெண்பா

18. கனியெல்லாம் சிவலிங்கம், கனிகள் ஈன்ற சுளையெலாம் சிவலிங்கம் எவ்வூரில்?

(a) மதுரையில் (b) சிதம்பரத்தில்

(c) குற்றாலத்தில் (d) திருவண்ணாமலையில்

19. தினகரன் போல் சிவப்பழகு, கருப்பழகு எதனில்?

(a) திருநுதலில் (b) திருமிடற்றில்

(c) திருமுகத்தில் (d) திருச்செவியில்

20. குற்றால நாதருக்கு உரிய எந்தமலை குறத்தியின் சொந்த மலை?

(a) திரிகூடமலை (b) கயிலை மலை

(c) சகல மலை (d) தென்மலை

21. பின்வருவனவற்றுள் எப்பருவம் பெண்பாற் பிள்ளைத்தமிழ் நூலில் இடம்பெறாதது எனக் கண்டறிக.

(a) அம்மானை (b) ஊசல்

(c) நீராடல் (d) சிறுபறை

22. அங்கயல் கண் அமுது, மங்கையர்க்கு அரசி யார்?

(a) தமிழ் (b) மீனாட்சி

(c) வசந்தவல்லி (d) குறத்தி

23. தேவர்கள் குடித்து மகிழ்ந்து உமிழ்ந்த கோது எது என்று காட்டுகிறார் குமரகுருபரர்?

(a) அமுதம் (b) திங்கள்

(c) விண்மீன் (d) சூரியன்

24. நிலவும் அணியும் ஆடை எது எனக் குமரகுருபரர் குறிக்கிறார்?

(a) பொன்னாடை (b) வெள்ளாடை

(c) மரகத ஆடை (d) மஞ்சளாடை

25. தஞ்சைவாணன் கோவையில் தலைவியின் மேனி குழையக் காரணமானவற்றோடு தொடர்பில்லாதது எது ?

(a) வண்டல் இழைத்தாள்

(b) தழை கொய்தாள்

(c) நீருள் குளித்தாள்

(d) தந்தை கண்டான்

26. தோழி தலைவியை எதனை வணங்கச் சொன்னாள் ?

(a) மலையுறை தெய்வம்

(b) காடுறை தெய்வம்

(c) திங்கள்

(d) மலை

27. தலைவி சோழன் வரவைக் காணக்கூடாது எனக் கதவைச் சாத்தியவள் யார் ?

(a) தோழி (b) செவிலி

(c) நற்றாய் (d) பாங்கி

28. சோழனின் குதிரையின் பெயர் யாது ?

(a) பாடலம் (b) மாமருட்டி

(c) சாலோகம் (d) சுடரிலை

29. பேயின் நாக்கு வெளிக்காட்டல் எதனை ஒத்திருந்ததாகக் கலிங்கத்துப்பரணி குறிக்கிறது ?

(a) இரும்புக் குழாய் வெளிவரல்

(b) தீக்குழம்பு வெளிவரல்

(c) செவ்வாவி வெளிவரல்

(d) பொந்தில் உள்ள பாம்பு வெளிவரல்

30. கதிரவனின் மனைவி பெயர் யாது?

(a) ஐயை (b) மாயை

(c) சாயை (d) மிளை

31. மங்கை என்பது எவ்வயதாரைக் குறிக்கும்?

(a) 8 முதல் 11 வரை (b) 26 முதல் 31 வரை

(c) 12 முதல் 13 வரை (d) 12 முதல் 18 வரை

32. உலா எந்த வகை யாப்பில் எழுதப்பட வேண்டும்?

(a) கலி வெண்பா (b) கலிப்பா

(c) ஆசிரிய விருத்தம் (d) வெண்பா

33. குலோத்துங்கன் எவ்வூர்க்கோயிலுக்குப் பெரிதும் திருப்பணி செய்தான்?

(a) தில்லை (b) மதுரை

(c) தஞ்சை (d) கங்கை கொண்ட சோழபுரம்

## பகுதி ஆ (7 × 6 = 42)

பின்வருவனவற்றில் (a) அல்லது (b) வைத் தேர்ந்தெடுத்து விடையளிக்க.

34. (a) கலிங்கத்துப்பரணி நூலின் அமைப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

(b) கலிங்கத்துப்பரணி கடவுளர்களை வாழ்த்தும் முறை பற்றி எழுதுக.

35. (a) கலிங்கத்துப்பரணி காடு பாடிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(b) குலோத்துங்க சோழன் உலாவில் இடம்பெறும் பெண்களின் காதல் நிலை குறித்து எழுதுக.

36. (a) நந்திக் கலம்பகத்தில் இடம்பெறும் யானை மறம் பற்றிய செய்திகளைத் தொகுக்க.

(அல்லது)

(b) நந்திவர்மனின் ஆட்சிச் சிறப்பு குறித்து எழுதுக.

37. (a) தமிழ்விடு தூதின் தனிச்சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(b) தமிழின் மேன்மைகளைத் தமிழ்விடு தூது எவ்வாறு எடுத்துரைக்கின்றது ?

38. (a) வசந்தவல்லியின் காதல் குறித்து எழுதுக.

(அல்லது)

(b) குற்றாலக் குறவஞ்சியில் இடம்பெறும் குறத்தியின் பாத்திரப்படைப்பு குறித்து எழுதுக.

39. (a) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் ஏதேனும் ஐந்து பருவங்கள் தரும் செய்திகளை எழுதுக.

(அல்லது)

(b) அம்புலிப் பருவத்தின் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

40. (a) தஞ்சைவாணன் கோவையில் இலக்கிய நலத்தைத் தொகுக்க.

(அல்லது)

(b) முத்தொள்ளாயிரம் தரும் சோழர் தம் சிறப்பினை எழுதுக.

| N–0471 |
|---|

| Sub. Code |
|---|
| 205134 |

**M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Year – Third Semester**

**இலக்கணம் - 3**
**தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி அ (33 × 1 = 33)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. தீம்புனல் உலகத் தெய்வம் __________.

   (a) சேயோன் (b) வேந்தன்

   (c) மாயோன் (d) வருணன்

2. தொண்டகப்பறை - எத்திணைக்கு உரியது?

   (a) குறிஞ்சி (b) முல்லை

   (c) மருதம் (d) பாலை

3. ‘ஏறிய மடல்திறம்’ - எதற்குரியது?

   (a) பாலை (b) குறிஞ்சி

   (c) பெருந்திணை (d) கைக்கிளை

4. புலனெறி வழக்கத்திற்கு உரியன __________.

   (a) கலி, பரிபாட்டு

   (b) கலி, வெண்பா

   (c) வெண்பா, பரிபாட்டு

   (d) வெண்பா, அகவல்

5. ‘வேய்’ என்பது __________.

(a) தூது (b) போர்

(c) பயணம் (d) ஒற்றாடல்

6. ‘போந்தை’ சூடுவோர் __________.

(a) சேரர் (b) பாண்டியர்

(c) சோழர் (d) பல்லவர்

7. ‘பெருஞ்சோற்று நிலை’ இடம்பெறும் திணை

(a) உழிஞை (b) வஞ்சி

(c) வெட்சி (d) காஞ்சி

8. உழிஞைத் திணையின் வகைகள் __________.

(a) 8 (b) 7

(c) 10 (d) 21

9. நெய்தலுக்குப் புறனாகும் புறத்திணை __________.

(a) வஞ்சி (b) வாகை

(c) காஞ்சி (d) தும்பை

10. ‘கடிமனை நீத்த பால்’ இடம்பெறும் திணை __________.

(a) தும்பை (b) பாடாண்

(c) வாகை (d) வஞ்சி

11. ‘நில்லா உலகம் புல்லிய நெறித்து’ - எது ?

(a) வஞ்சி (b) பாடாண்

(c) காஞ்சி (d) வாகை

12. காதலி இழந்த நிலை __________.

(a) தபுதார நிலை (b) தாபத நிலை

(c) முதுபாலை (d) மாலை நிலை

13. ‘கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருவன’

(a) 3 (b) 5

(c) 7 (d) 9

14. வேம்பும் கடுவும்போல வெஞ்சொல் வழி நனிபயக்கக் கூறுதல் __________.

(a) கொடிநிலை (b) செவியறிவுறூஉ

(c) வாயுறை வாழ்த்து (d) புறநிலை வாழ்த்து

15. ‘முன்னிலையாக்கல்’ - யார் கூற்று?

(a) தலைவன் (b) தோழி

(c) தலைவி (d) பாங்கன்

16. ‘பேதைமையூட்டல்’ - யார் கூற்று?

(a) பாங்கன் (b) தலைவன்

(c) தோழி (d) தலைவி

17. தோழி அறத்தொடு நிற்றலின் வகை __________.

(a) 7 (b) 8

(c) 9 (d) 10

18. ‘பால்கெழு கிளவி __________ உரித்தே’.

(a) மூவர்க்கும் (b) நால்வர்க்கும்

(c) ஐவர்க்கும் (d) இருவர்க்கும்

19. ‘வரைவு கடாவுதல்’ நிகழ்த்துபவர் __________.

(a) தோழி (b) தலைவி

(c) செவிலி (d) நற்றாய்

20. உள்ளுறையின் வகைகள் __________.

(a) 5 (b) 6

(c) 7 (d) 8

21. கொடை காரணமாகப் பிறப்பது __________.

(a) நகை (b) வெகுளி

(c) பெருமிதம் (d) அழுகை

22. உவமை தோன்றும் நிலைக்களன்கள் __________.

(a) 4 (b) 5

(c) 6 (d) 8

23. கலிப்பாவின் ஓசை __________.

(a) தூங்கல் (b) அகவல்

(c) துள்ளல் (d) செப்பல்

24. உவமப் போலியின் எண்ணிக்கை __________.

(a) 5 (b) 6

(c) 7 (d) 8

25. ஓரடி முழுவதும் ஒரு சொல்லே மீண்டும் வரப் பாடுவது __________.

(a) இயைபுத் தொடை (b) முரண் தொடை

(c) இரட்டைத் தொடை (d) செந்தொடை

26. அங்கத்தின் வகைகள் __________.

(a) 5 (b) 3

(c) 4 (d) 2

27. ஈரறிவுயிர் - எது?

(a) புல் (b) நந்து

(c) மான் (d) எறும்பு

28. 'இராம சரிதமும் பாண்டவ சரிதமும்' எவ்வகையின?

(a) அம்மை (b) தொன்மை

(c) அழகு (d) தோல்

29. ‘வாயுறை வாழ்த்து’ - எத்திணைக்குரியது?

(a) தும்பை (b) வாகை

(c) வஞ்சி (d) பாடாண்

30. ‘காஞ்சி’ எந்த அகத்திணைக்குப் புறன்?

(a) கைக்கிளை (b) பெருந்திணை

(c) குறிஞ்சி (d) முல்லை

31. ஆய்தம் பயின்று வருவது ________.

(a) சித்திர வண்ணம் (b) ஒரூஉ வண்ணம்

(c) நலிபு வண்ணம் (d) ஒழுகு வண்ணம்

32. ‘குடிகோள்’ நிலைக்களனாக வருவது ________.

(a) வெகுளி (b) நகை

(c) பெருமிதம் (d) அச்சம்

33. மரபியல் கூறும் ‘போத்து’ என்பது ________.

(a) ஆண்பாற் பெயர் (b) பெண்பாற் பெயர்

(c) பொதுப் பெயர் (d) குழவிப் பெயர்

**பகுதி ஆ** $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (a) கருப்பொருள் பற்றி விளக்குக.

(அல்லது)

(b) கண்டோர் கூற்று நிகழுமிடங்களை எடுத்துரைக்க.

35. (a) வெட்சியின் துறைகளை விளக்குக.

(அல்லது)

(b) அகத்தோன் செல்வம் குறித்து விவரிக்க.

36. (a) வாகைத் திணையின் பாகுபாடுகளை விளக்குக.

(அல்லது)

(b) காஞ்சித்திணை, நிலையாமையைக் குறித்தலை எடுத்துரைக்க.

37. (a) இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் கூற்று நிகழுமிடங்களை விளக்குக.

(அல்லது)

(b) கற்பில் தோழி கூற்று நிகழும் இடங்கள் குறித்து விவரிக்க.

38. (a) தொல்காப்பியம் கூறும் 'இறைச்சிப் பொருள்' குறித்து விவரி.

(அல்லது)

(b) எண் வகை மெய்ப்பாடுகளை விளக்குக.

39. (a) உவமப்போலி குறித்து விவரிக்க.

(அல்லது)

(b) பாக்களின் தொடை வகைகளை விளக்குக.

40. (a) மரபியல் சுட்டும் இளமைப் பெயர்களை விவரி.

(அல்லது)

(b) தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் குறித்து விளக்குக.

| N–0472 |
|---|

| Sub. Code |
|---|
| 205141 |

**M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Year – Fourth Semester**

**ஒப்பிலக்கியம்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (33 × 1 = 33)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. ஒப்பியல் அறிஞர் ஜான் அடிங்டன் சைமாண்ட்ஸ் ———— நாட்டவர்

   (a) ஜெர்மனி (b) ரஷ்யா

   (c) இங்கிலாந்து (d) பிரெஞ்சு

2. ஒப்பிலக்கியம் என்ற சொற்றொடரை மறுத்தவர்

   (a) லேன் கூப்பர் (b) குரேசே

   (c) எஸ்.எஸ். பிராவர் (d) பாசுநெட்

3. Theory of Literature என்னும் நூலை மொழிபெயர்த்தவர்

   (a) கைலாசபதி (b) குளோரியா சுந்தரமதி

   (c) தமிழண்ணல் (d) பாவாணர்

4. தெலுங்கின் முதல் காப்பியம்

(a) சிவகவியுகம்

(b) போதனர் பாகவதம்

(c) பாஸ்கர இராமாயணம்

(d) ஆந்திர மகாபாரதம்

5. ஒப்பிலக்கிய அறிமுகம் என்னும் நூலை எழுதியவர்

(a) தமிழண்ணல் (b) மு.வ.

(c) தெ.பொ.மீ (d) கைலாசபதி

6. ஆண்டாளின் பாடலில் காணப்பெறும் நெறி

(a) சகமார்க்கம் (b) சன்மார்க்கம்

(c) தாசமார்கம் (d) இவை எதுவுமில்லை

7. போர்க்கலை என்னும் நூலின் ஆசிரியர்

(a) மறைமலையடிகள் (b) பாலசுப்பிரமணியம்

(c) கி. நாச்சிமுத்து (d) சின்னத்தம்பி முருகேசன்

8. 'மன்யோசு' தொகுப்பில் இடம்பெற்றுள்ள பாடல்கள்

(a) 4516 (b) 4536

(c) 4000 (d) 4018

9. தொல்காப்பியத்தோடு ஒப்பிடத்தக்க சீன நூல்

(a) மன்யோசு (b) பிங்ஃபா

(c) ஸீன்ட்ஸீ (d) இவை எதுவுமில்லை

10. கம்பனையும் மில்டனையும் ஒப்பிட்டு ஆராய்ந்தவர்

(a) சச்சிதானந்தம் (b) மணவாளன்

(c) மருதநாயகம் (d) எஸ். இராமகிருஷ்ணன்

11. பயன் முதற்கொள்கை வலியுறுத்தப்பட்ட கிரேக்க நாடகம்

(a) ஹீஸியட் (b) எம்படோக்ளிஸ்

(c) தவளைகள் (d) இவை எதுவுமில்லை

12. The Motology - சொல்லின் மொழி பெயர்ப்பு

(a) அடிக் கருத்தியல் (b) தன்வயமாக்கல்

(c) மூலமொழியியல் (d) தொன்மவியல்

13. ஒப்பிலக்கிய ஆய்வுத்துறையில் உள்ள பெரும் பிரிவுகள்

(a) நான்கு (b) இரண்டு

(c) ஆறு (d) ஐந்து

14. படிமம் —————— வகைப்படும்

(a) 4 (b) 5

(c) 2 (d) 6

15. சிலப்பதிகாரத்தைத் தேசியக்காப்பியம் என்றுரைத்தவர்

(a) அ.ச. ஞானசம்பந்தன் (b) தெ.பொ.மீ

(c) ம.பொ.சி (d) பரிதிமாற்கலைஞன்

16. ஒப்பியல் இலக்கியம் நூலை எழுதியவர்

(a) க. கைலாசபதி (b) சச்சிதானந்தம்

(c) ஜான்சாமுவேல் (d) கா. செல்லப்பன்

17. இந்தியாவில் ஒப்பிலக்கியத் துறையை ஏற்படுத்தியவர்

(a) புத்ததேவபோஸ் (b) காத்தையன்

(c) கனகசபாபதி (d) தமிழண்ணல்

18. ஒப்பிலக்கிய ஆய்வின் தடைகளை நீக்கியவர்

(a) சூசன் பாசுனெட் (b) புஷ்கின்

(c) விக்னி (d) வால்டர் ஸ்காட்

19. இலக்கிய ஒப்பீட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட இடம்

(a) மெல்போன் (b) சார்போன்

(c) இங்கிலாந்து (d) இவை எதுவும் இல்லை

20. கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கியத் துறையை ஏற்படுத்தியவர்

(a) சார்போன் (b) ஆர்தர் கிறிஷ்டி

(c) விசுகான்சின் (d) காம்பெல்

21. இலக்கியப் படைப்புகளில் தேசியத்தன்மையைப் புறக்கணித்தவர்கள்

(a) பிரெஞ்சுக்காரர் (b) அமெரிக்கர்

(c) ரஷ்யர் (d) ஜெர்மனியர்

22. தியோடர் செவரி மொழிபெயர்ப்பினை ________ பிரிவுகளாகப் பிரிக்கிறார்.

(a) 4 (b) 3

(c) 5 (d) 2

23. ஜான் டிரைடன் மொழிபெயர்ப்புக் கலையை ________ ஆகப் பகுப்பர்

(a) 5 (b) 2

(c) 3 (d) 4

24. பிளேட்டோவின் குடியரசு நூலினை மொழிபெயர்த்தவர்

(a) சாமிநாதசர்மா (b) இராமனுசர்

(c) வி. தாமஸ் (d) ஆதித்தர்

25. 'எம்மா' என்னும் புதினம் தமிழில் ________ வகையாக மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

(a) 3 (b) 4

(c) 5 (d) 2

26. நெடுநல்வாடையை ———————— என்பர் தமிழண்ணல்

(a) ஓவியப்பாட்டு (b) சிற்பப் பாட்டு

(c) பெரும்பாட்டு (d) நெடும்பாட்டு

27. இருண்மை ஓவிய முறையைத் தொடங்கி வைத்தவர்

(a) கேண்டிஸ்கி (b) பிகாசோ

(c) ஸ்ட்ராவின்ஸ்கி (d) அரிஸ்டாட்டில்

28. இலக்கியத்தைக் காலத்தின் ஆன்மா என்றுரைத்தவர்

(a) சார்லஸ் (b) பிரான்சிஸ் பேகன்

(c) பிராட்லி (d) பி. கெர்

29. கனவுகளின் அடிப்படை விளக்கம் நூலை எழுதியவர்

(a) நார்த் ராப்பிரை (b) லியோனல்

(c) சிக்மண்ட் ஃபிராய்டு (d) ட்ரில்லிங்கோ

30. இந்திய வீரயுகத்தை ஆராய்ந்தவர்

(a) என்.கே. சித்தாந்தா (b) சித்தார்த்

(c) தருமு சிவராமு (d) மயன்

31. உலகப் பொதுமைக் கோட்பாட்டைக் கூறும் முதல் தமிழ் நூல்

(a) திருக்குறள் (b) புறநானூறு

(c) தொல்காப்பியம் (d) நற்றினை

32. சார்பியல் கோட்பாட்டை உரைத்தவர்

(a) ஐன்ஸ்டீன் (b) சாமுவேல்

(c) ஹோமர் (d) தாந்தே

33. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் எத்துறைக்காக நோபர் பரிசு பெற்றார்

(a) உயிரியல் (b) இயற்பியல்

(c) வேதியியல் (d) மருத்துவ இயல்

பகுதி ஆ (7 × 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) ஒப்பிலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து விளக்குக.

(அல்லது)

(b) தமிழ், மலையாள இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்ந்துரைக்க.

35. (a) இரட்டைக் காப்பிய ஒப்பீடுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) தொல்காப்பியம் மற்றும் பிங்க்ஃபா ஆகியவற்றில் காணலாகும் கருத்துக்களை ஒப்பிட்டுரைக்க.

36. (a) அறநெறிப் பாடல்களின் பொதுமைப் பண்புகளை ஒப்பிட்டு ஆராய்க.

(அல்லது)

(b) ஒப்பிலக்கிய ஆய்வில் அடிக்கருத்தியல் பெறுமிடத்தை விளக்குக.

37. (a) ஒப்பிலக்கிய ஆய்வில் தாக்கக் கோட்பாடு ஏற்படுத்திய தாக்கத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) ஆற்றல்மிக்க போக்கு என்னும் ஒப்பீட்டுக் கொள்கை குறித்து விளக்குக.

38. (a) அமெரிக்காவில் ஒப்பிலக்கியம் பெற்ற வளர்ச்சி பற்றி விளக்குக.

Or

(b) மொழிபெயர்ப்பின் வரலாற்றை விவரிக்க.

39. (a) இலக்கியத்தில் இசை பெறுமிடத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) சிக்மண்ட் பிராய்டின் உளவியல் சிந்தனையை ஏதேனும் ஓர் இலக்கியத்துடன் ஒப்பிட்டு எழுதுக.

40. (a) இயற்பியல் கோட்பாடுகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(b) ஐன்ஸ்டைனின் சார்புக் கோட்பாடு பற்றி எழுதுக.

| N–0473 |
|---|

| Sub. Code |
|---|
| 205142 |

**M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Year – Fourth Semester**

பண்பாட்டு மானிடவியல்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் விளையளிக்க.

1. மானிடவியல் துறை தோன்றி ஏறக்குறைய ____________ ஆண்டுகள் ஆகின்றன.

   (a) 120 (b) 180

   (c) 115 (d) 200

2. தொடக்காலச் சமுதாயம் ஏற்றத்தாழ்வுகளின்றி ஒரு படித்தானதாக இருந்தது என்றுரைத்தவர்

   (a) புரோட்டோகோரஸ்

   (b) செனனோபேன்ஸ்

   (c) ஹெரோடாட்டஸ்

   (d) பிளேட்டோ

3. கடவுளின் நகரம் என்னும் புகழ்மிக்க நூலை எழுதியவர்

(a) டெமோகிரிட்டஸ் (b) அகஸ்டின்

(c) ஒரோசியஸ் (d) சாக்ரடீஸ்

4. உயிரியல் சார் பண்புகள் குறித்துச் சிந்தித்த மானிடவியலாளர்

(a) அரிஸ்டாட்டில் (b) ஹென்றிமெயின்

(c) எப்பிக்கூரஸ் (d) பிளேட்டோ

5. புத்தாய்வுச் செய்திகளைக் கல்வித்துறை பயன்படுத்துமளவு தொகுத்தளித்தவர்

(a) வாஸ்கோடகாமா (b) கொலம்பஸ்

(c) பாகியான் (d) சர்ஜான்

6. இயற்கை நிலையில் வாழ்வதே மனிதனுக்க உகந்தது எனக் கூறியவர்

(a) தாமஸ் ஹாப்ஸ் (b) ஜூன் ழாக் ரூசோ

(c) ஜோசப் ப்ரீஸ்ட்லி (d) ஜார்ஜ் டி பஃபன்

7. விதிகளின் மெய்க்கருத்து என்னும் நூலினை எழுதியவர்

(a) சார்லஸ் மாண்டஸ்கு (b) டுர்காட்

(c) கண்டர்சே (d) ஜான்லாக்

8. அஸ்பெத் பழங்குடிமக்களின் வாழ்வியலை ஆராய்ந்தவர்

(a) கிராப்ட் (b) சகாகுன்

(c) சிப்பிவா (d) லஃபிட்டாவ்

9. வித்யார்த்தி மானிடவியலின் வளர்ச்சியை ____________ ஆகப் பகுத்துரைப்பவர்

(a) ஐந்து (b) நான்கு

(c) மூன்று (d) இரண்டு

10. தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும் நூல்வரிசையை எழுதியவர்

(a) கேம்ப்பெல் (b) ரைஸ்லி

(c) தர்ஸ்டன் (d) தால்டன்

11. Anthropologist என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்

(a) பிளேட்டோ (b) அரிஸ்டாட்டில்

(c) சாக்ரடீஸ் (d) புரோட்டோகோரஸ்

12. மானிடவியல் ஒரு முழுமையான அறிவியல் என்றுரைத்தவர்

(a) குளூக்கான் (b) சாக்ரடீஸ்

(c) குரோபர் (d) எப்பிக்கூரஸ்

13. உயிரின வகைப்பாட்டின் தந்தை என்று போற்றப்பெறுபவர்

(a) பேக்கன் (b) லின்னேயஸ்

(c) ஜேம்ஸ்உசர் (d) கோம்ட்

14. மனித இனம் ____________ மூதாதையரிலிருந்து தோன்றியவது

(a) நியாண்டர்தால் (b) நீக்ரோவினர்

(c) காக்கேசியர் (d) மங்கோலியல்

15. மருத்துவ மானிடவியல் பற்றிய ஆய்விற்காக நோபல் பரிசு பெற்றவர்

(a) நியூகினியர் (b) மில்லர்

(c) சார்லஸ் (d) மங்கோலியர்

16. ஆங்கிலேய மானிடவியல் ____________ மானிடவியலாகும்.

(a) பண்பாட்டு (b) சமுதாய

(c) வரலாற்று (d) அறிவியல்

17. வழவழப்பான கருவிகள் பயன்படுத்தப்பட்ட காலம்

(a) பழைய கற்காலம்

(b) புதிய கற்காலம்

(c) இடைப்பழங்கற்காலம்

(d) கடைப்பழங்கற்காலம்

18. சமுதாயப் பண்பாட்டு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது

(a) இனக்குழுவியல் (b) சமுதாயவியல்

(c) வரலாற்றியல் (d) தொல்லியல்

19. வினா நிரல்கள் வழித் தரவுகளைச் சேகரித்தவர்

(a) பிரேசர் (b) சி. ஹாடன்

(c) செலிக்மேன் (d) சார்லஸ்

20. டாரஸ் நீர்ச்சந்தி ஆய்வுப்பயணம் எதற்காக மேற்கொள்ளப்பெற்றது.

(a) வரலாற்றை அறிய (b) மானிடவியலை ஆராய

(c) இயற்கையை அறிய (d) இவை ஏதுமில்லை

21. மானிடவியலில் குடிவழிப்பட்டியல் தயாரிக்கும் முறையைப் பின்பற்றியவர்

(a) எச்.ஆர். ரிவர்ஸ் (b) டில்தே

(c) மார்டன் (d) மாலினோஸ்கி

22. தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும் என்னும் நூல் வரிசையை மொழிபெயர்த்தவர்

(a) க. இரத்தினம் (b) பக்தவத்சலபாரதி

(c) இளங்கோ (d) இவான்ஸ்

23. உலகம் முழுவதிற்குமான பண்பாட்டினை மதிப்பாய்வை ஆராய்ந்தவர்

(a) ஜார்ஜ் பீட்டர் மர்டாக்

(b) பிரட் எக்கான்

(c) கேம்பெல்

(d) பிரௌன்

24. இந்தியர்களின் பண்பாட்டு விழுமியம் ____________ ஆகும்.

(a) அமைதித்தன்மை (b) சமத்துவம்

(c) வீரத்தன்மை (d) ஆன்மிக உணர்வு

25. பண்பாட்டியலார் எத்தனை வகை உட்கூறுகளை இனங்காண்பர்

(a) 4 (b) 3

(c) 5 (d) 2

26. பொருள்சாராப் பண்பாட்டில் ____________ வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும்

(a) அழகியல் (b) பொருள்

(c) புதைநிலை (d) அறிதிறன்

27. Tribe என்னும் சொல் இலத்தீன் மொழியில் ____________ எனப் பொருள்படும்

(a) மூன்றில் ஒன்று (b) இரண்டில் ஒன்று

(c) நான்கில் ஒன்று (d) ஆறில் ஒன்று

28. பண்பாட்டுக் கூறு பற்றிய கருத்துக்களுள் ____________ கருத்து சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

(a) ஹோபல் (b) மாலினோஸ்கி

(c) விஸ்லர் (d) லிண்டன்

29. ஜப்பானியரின் பண்பாட்டு விழுமியம்

(a) தூய்மை (b) வாய்மை

(c) அழகு (d) அமைதி

30. சமயக் கொள்கையை வகுத்தவர்

(a) கியூக்லி (b) நெஸ்பீல்டு

(c) ஹட்டன் (d) ஹோகார்ட்

31. ஆளுமை வகை பற்றி ஆராய்ந்தவர்

(a) குர்ரே (b) மஜீம்தார்

(c) பெனிடிக் (d) மாண்டகு

32. சாதியம் குறித்த கருத்தியல் வாதிகளின் முன்னோடி

(a) லூயிதுய்மோன் (b) கியூக்லி

(c) ரஹேஜா (d) ஹோகார்ட்

33. சிறுத்தொண்டர் நாடகப் பனுவல் குறித்து ஆராய்ந்தவர்

(a) இ.முத்தையா (b) கா.சுந்தர்

(c) ஒ. முத்தையா (d) தனஞ்செயன்

பகுதி ஆ (7 × 6 = 42)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) டெமோகிரிட்டஸ் மானிடவியல் ஆய்விற்கு ஆற்றிய பங்களிப்பினை விவரிக்க.

(அல்லது)

(b) பிளேட்டோவின் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை எடுத்துரைக்க.

35. (a) ஐரோப்பியர்களின் பேரரசுக் கொள்கையும் மானிடவியலும் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) இந்திய மானிடவியல் வளர்ச்சியின் மூன்று நிலைகள் யாவை?

36. (a) உடல் சார் மானிடவியலின் படிநிலைகளை ஆராய்க.

(அல்லது)

(b) தொல்லியலுக்கும் மானிடவியலுக்கும் இடையேயுள்ள தொடர்பினை ஆராய்க.

37. (a) சமுதாய மானிடவியல் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(b) இக்காலக் களப்பணிமுறை குறித்து விளக்குக.

38. (a) ஆய்வுத் தரவுகளைப் பெறும் வழிமுறைகளைக் கூறுக.

(அல்லது)

(b) வழக்கடிபாடுகள் பற்றி நீவிர் அறிவன யாவை?

39. (a) பண்பாட்டுப் பொதுமைகளை விவரிக்க.

(அல்லது)

(b) ஆளுமையின் வகைமை குறித்த மானிடவியலார் கருத்துகளை விவரிக்க.

40. (a) பழங்குடியினரின் சாதிக்கொள்கைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) பொருள்முதல் வாதத்தினரின் அணுகுமுறையை விளக்குக.

---

**N–0474**

| Sub. Code |
|---|
| 205143 |

**M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Year – Fourth Semester**

**தமிழக வரலாறும் பண்பாடும்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தமிழக இயற்கை அமைப்பை வரலாற்றுடன் இயைபுபடுத்திக் காட்டியவர்களுள் ஒருவர் யார்?

   (a) மு. வரதராசன் (b) வையாபுரிப் பிள்ளை

   (c) கே.கே. பிள்ளை (d) தேவநேயப் பாவாணர்

2. தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாக நன்னூல் குறிப்பிடுவது.

   (a) குணகடல் (b) குடகம்

   (c) குமரிக்கோடு (d) வஞ்சி

3. ‘தமிழர்கள் மத்தியத் தரைக்கடல் நாடுகளில் குடியேறிப் பல நாகரிகங்களை வளர்த்தனர்’ என்ற கொள்கைக்கு ஆதரவு கொடுத்தவர்.

   (a) மு. இராகவையங்கார்

   (b) சதாசிவ பண்டாரத்தார்

   (c) பி.டி. சீனிவாச அய்யங்கார்

   (d) நீலகண்ட சாஸ்திரி

4. செங்கல்பட்டு மாவட்டத்தில் 1863-ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சி செய்தவர்.

(a) புரூஸ் பூட்

(b) எட்வர்டு ஆர். அயிர்டன்

(c) ஜான் கன்னர் ஆண்டர்சன்

(d) சர்ச்சில் பாபிங்டன்

5. சேரர், பாண்டியர், வேளிர் ஆகியோரைச் சோழன் கரிகாலன் ஒருங்கே வெற்றிகொண்ட இடம்?

(a) திருப்புறம்பியம்

(b) காந்தளூர்

(c) வெண்ணிப் பறந்தலை

(d) கொடும்பாளூர்

6. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்களுள் ஒன்று?

(a) சிறுபாணாற்றுப்படை

(b) நெடுநல்வாடை

(c) பொருநராற்றுப்படை

(d) பெரும்பாணாற்றுப்படை

7. யவனப்பிரியா என்று உரோமானியரால் அழைக்கப்பட்ட பொருள்?

(a) அகில் (b) சந்தனம்

(c) மிளகு (d) மயிற்பீலி

8. ‘தமிழ்நாட்டிலிருந்து சீனாவிற்கு 100 கப்பல் மிளகு செல்லும்’ எனக் குறிப்பிட்டவர் யார்?

(a) யுவான் சுவாங் (b) தாலமி

(c) ஹிப்பாகிரிட்டசு (d) மார்

9. சித்தன்னவாசல் ஓவியங்களின் காலம்

(a) பல்லவர் காலம்

(b) பிற்காலச் சோழர் காலம்

(c) பிற்காலப் பாண்டியர் காலம்

(d) நாயக்கர் காலம்

10. மத்தவிலாசப் பிரகசனம் என்ற நூலை இயற்றியவர்.

(a) நரசிம்மவர்மன் (b) விஜயாலய சோழன்

(c) மகேந்திரவர்மன் (d) அபராஜிதன்

11. தில்லைக்குப் பொன் வேய்ந்த சோழ அரசன்

(a) உத்தமசோழன் (b) பாராந்தக சோழன்

(c) இராசராச சோழன் (d) இராசேந்திர சோழன்

12. திருவிசைப்பா என்ற நூலை இயற்றிய சோழ அரசர்

(a) விக்கிரம சோழர்

(b) அரிஞ்சய சோழர்

(c) குலோத்துங்க சோழன்

(d) கண்டராதித்த சோழன்

13. இரண்டாம் பாண்டியப் பேரரசினை நிறுவியவர்.

(a) முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

(b) இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

(c) முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன்

(d) மாறவர்மன் குலசேகர பாண்டியன்

14. பாண்டியரை வென்ற சுல்தானியத் தளபதி

(a) அலாவுதீன் கில்ஜி (b) மாலிக் காபூர்

(c) முபாரக் ஷா (d) குஸ்ருகான்

15. திருமலை நாயக்கரின் ஆட்சிக்காலம்

(a) 1623-1659 (b) 1564-1570

(c) 1609-1623 (d) 1601-1609

16. இராமநாதபுரம் சேதுபதி குடும்பத்தில் தோன்றிய அரசுரிமைப் போட்டியில் தலையிட்டுத் தீர்வளித்த மராட்டிய மன்னர் யார்?

(a) துக்காசி (b) வெங்காசி

(c) முதலாம் சரபோசி (d) பிரதாபசிங்

17. ஆங்கிலேயரை எதிர்த்த முதல் விடுதலை வீரர்

(a) வீரபாண்டிய கட்டபொம்மன்

(b) பூலித்தேவர்

(c) சின்ன மருது

(d) முத்தவடுகநாதர்

18. ஆங்கிலேயர்க்கும் மருது சகோதரர்களுக்குமான இறுதிப்போர் நடைபெற்ற ஆண்டு

(a) 1800 (b) 1790

(c) 1795 (d) 1801

19. திலகரின் ஆதரவாளராக விளங்கிய தமிழ்நாட்டுத் தியாகி

(a) வ.உ. சிதம்பரனார் (b) விசயராகவாச்சாரி

(c) ராஜகோபாலாச்சாரி (d) சத்தியமூர்த்தி

20. 1920-இல் நடைபெற்ற சென்னை மாகாணத் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சி

(a) சுயராச்சியக் கட்சி (b) நீதிக்கட்சி

(c) காங்கிரசு (d) இவற்றுள் எதுவும் இல்லை

21. தாயுமானவர் பாடலை நினைவூட்டுவன

(a) சவ்வாதுப் புலவர் பாடல்கள்

(b) உமறுப்புலவர் பாடல்கள்

(c) குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்

(d) இவற்றுள் எதுவும் இல்லை

22. தேம்பாவணியை இயற்றியவர்

(a) வீரமாமுனிவர் (b) கிருட்டிணப்பிள்ளை

(c) கால்டுவெல் (d) எல்லீஸ்

23. கோயில் கட்டட உறுப்புகளுள் ‘முடி’ என்பது எதனைக் குறிக்கிறது?

(a) கருவறை (b) கலசம்

(c) கொடிமரம் (d) கூரை

24. திருவுண்ணாழிகை என்பது யாது?

(a) அர்த்த மண்டபம் (b) இராச கோபுரம்

(c) கொடிமரம் (d) கருவறை

25. அல்லது செய்தல் ஓம்புமின் என்று பாடியவர்.

(a) நரிவெரூஉத்தலையார்

(b) கபிலர்

(c) பக்குடுக்கை நன்கணியார்

(d) பரணர்

26. விருந்தோம்பலுக்கு எடுத்துக்காட்டாகச் சேக்கிழாரால் பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டவர்?

(a) கண்ணப்ப நாயனார்

(b) திருநீலகண்ட நாயனார்

(c) இளையான்குடி மாற நாயனார்

(d) காரைக்கால் அம்மையார்

27. பொருநை ஆறு ஓடும் மாவட்டம்?

(a) கோயம்புத்தூர் (b) திருநெல்வேலி

(c) தேனி (d) மதுரை

28. பொருநை ஆறு உருவாகும் மலை?

(a) ஆனைமலை (b) நீலகிரி

(c) பொதிய மலை (d) இவற்றுள் எதுவும் இல்லை

29. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையை எழுதியவர்.

(a) பம்மல் சம்மந்த முதலியார்

(b) அருணாச்சல கவிராயர்

(c) வி.மி. சானகி

(d) கோபால கிருஷ்ண பாரதியார்

30. தமிழிசைச் சங்கத்தை அமைத்தவர்

(a) ஆர். கே. சண்முகம் செட்டியார்

(b) ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்

(c) சர்.ஏ.டி. பன்னீர்செல்வம்

(d) பாண்டித்துரைத் தேவர்

31. 'பஞ்ச மரபு' என்ற நூலின் பொருண்மை

(a) இசை (b) நடனம்

(c) சிற்பம் (d) நாடகம்

32. உரையாசிரியர் இளம்பூரணரின் சமயம் யாது?

(a) சைவம் (b) வைணவம்

(c) சமணம் (d) பௌத்தம்

33. தமிழகத்தில் உப்புச் சத்தியாக்கிரகத்திற்குத் தலைமை வகித்தவர்

(a) வ. உ. சிதம்பரனார் (b) காமராசர்

(c) சத்தியமூர்த்தி (d) ராஜகோபாலாச்சாரி

## பகுதி ஆ $(7 \times 6 = 42)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

34. (a) பழந்தமிழ் நாட்டு எல்லைகள் குறித்த இலக்கியச் சான்றுகளை விளக்குக.

(அல்லது)

(b) தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட இரும்புக்காலப் படிமங்களை எடுத்துரைக்க.

35. (a) குமரிக்கண்டக் கருத்தியலை விளக்குக.

(அல்லது)

(b) பழந்தமிழரின் வணிகத் தொடர்புகளை விவரிக்க.

36. (a) பல்லவர் ஆட்சியில் கலை வளர்ச்சியை விரித்துரைக்க.

(அல்லது)

(b) சோழர் காலச் சமுதாயநிலையை விளக்கியுரைக்க.

37. (a) இசுலாமியர், விசயநகரப் பேரரசு ஆகியோரின் எழுச்சியை விவரிக்க.

(அல்லது)

(b) நாயக்கர் ஆட்சிக்காலத்தில் கலை இலக்கிய வளர்ச்சி குறித்து எழுதுக.

38. (a) ஆங்கிலேயர் ஆட்சியின் நன்மை தீமை பற்றி விளக்குக.

(அல்லது)

(b) சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாடுகளை விவரிக்க.

39. (a) இசுலாமியரின் தமிழ்த்தொண்டு குறித்து எழுதுக.

(அல்லது)

(b) தமிழ்நாட்டின் சிற்பக்கலை குறித்து எழுதுக.

40. (a) தமிழரின் விருந்தோம்பல் பற்றிய இலக்கியச் சான்றுகளை விளக்குக.

(அல்லது)

(b) இலக்கியத்தில் பொருநை ஆறு பற்றிய பதிவுகளை எடுத்துரைக்க.

———————

| N–0475 |
|---|

| Sub. Code |
|---|
| 205144 |

**M.A.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Year – Fourth Semester**

**ஆராய்ச்சி அறிமுகம்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளிலிருந்து வருவிக்கப்படும் செய்திகளை எடுத்துரைப்பது

   (a) புள்ளி விவரஆய்வு (b) மதிப்பீட்டாய்வு

   (c) மாதிரி ஆய்வு (d) உய்த்துணர் ஆய்வு

2. தகவல்களைத் துல்லியமாக அளவிட்டுக் கூறும் ஆய்வு முறை?

   (a) மதிப்பீட்டாய்வு (b) செயல்முறை ஆய்வு

   (c) அளந்தறி ஆய்வு (d) புள்ளி விவர ஆய்வு

3. ____________ மையமிட்ட தலைப்பினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்

   (a) சிக்கலை (b) தீர்வை

   (c) தேடலை (d) வளர்ச்சியை

4. ஆய்வு எல்லையை வகுத்துக்கொள்ள மிகவும் இன்றியமையாதவை?

(a) கவனமும் ஈரப்பும்

(b) ஆர்வமும் ஈடுபாடும்

(c) பயிற்சியும் முயற்சியும்

(d) வாய்ப்பும் தேடலும்

5. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது எனச் சோதனையில் நிறுவியவர்?

(a) பாரடே (b) கலிலியோ

(c) கோபர்னிகஸ் (d) ஆல்பர்ட் சுவைட்சல்

6. கொலம்பசின் ஆய்வுத் திறன் எத்தன்மைத்து?

(a) சலியாத மனம் (b) கடும் உழைப்பு

(c) அஞ்சா நெஞ்சம் (d) விடாமுயற்சி

7. நற்றிணை முதற்பதிப்பு வெளிவந்த ஆண்டு

(a) 1892 (b) 1914

(c) 1896 (d) 1918

8. மானிடவியல் துறையில் மிகவும் இன்றியமையாதது __________.

(a) சுவடி ஆய்வு (b) கல் வெட்டாய்வு

(c) சோதனை ஆய்வு (d) கள ஆய்வு

9. கலித்தொகையை முதன் முதலில் பதிப்பித்தவர்

(a) சி.வை.தாமோதரம்பிள்ளை

(b) வை. அனந்தராமையர்

(c) ரா. இராகவையங்கார்

(d) உ.வே. சாமிநாதையர்

10. உற்று நோக்கலின் மூன்று கூறுகளை வரிசைப்படுத்துக.

(a) கவனம், புலனுணர்வு, பொறியறிவு

(b) புலனுணர்வு, கவனம், பொறியறிவு

(c) பொறியறிவு, கவனம், புலனுணர்வு

(d) பொறியறிவு, புலனுணர்வு, கவனம்

11. இவ்வகை உற்று நோக்கலில் ஆய்வாளர் கருவிகளைப் பயன்படுத்துவதில்லை.

(a) கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல்

(b) கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல்

(c) ஆய்வாளர் பங்குபெற உற்றுநோக்கல்

(d) கள உற்றுநோக்கல்

12. உற்று நோக்கல் எத்தனை வகைப்படும்?

(a) ஆறு (b) ஏழு

(c) எட்டு (d) பத்து

13. எப்படி? ஏன்? என்று ஒவ்வொன்றையும் அணுகி ஆராய்வது ____________.

(a) அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை

(b) மாதிரி ஆய்வு அணுகுமுறை

(c) நடைமுறைகள் ஆய்வு அணுகுமுறை

(d) செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை

14. ஏற்கனவே பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் மேலும் ஆய்வு செய்வதற்கான அணுகுமுறை ?

(a) மாதிரி ஆய்வு அணுகுமுறை

(b) செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை

(c) உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை

(d) அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை

15. தெளிவான, வரையறுத்த, முன்னரே உருவாக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது ____________.

(a) கட்டமைப்புடைய வினாத்தொகுதி

(b) வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதி

(c) உண்மையறிவினாத்தொகுதி

(d) ஒரு நோக்கு வினாத்தொகுதி

16. தகவலாளியின் விடை தரும் வாய்ப்பை ஓர் எல்லைக்கு உட்படுத்துவது ____________.

(a) வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதி

(b) கட்டமைப்புடைய வினாத்தொகுதி

(c) கருத்தறி வினாத்தொகுதி

(d) ஒரு நோக்கு வினாத்தொகுதி

17. வினாநிரல் எத்தனை பகுதிகளைக் கொண்டது ?

(a) நான்கு (b) ஐந்து

(c) ஆறு (d) எட்டு

18. மக்கட்தொகைக் கணக்கெடுப்புக்குப் பயன்படுத்தப்படும் வினாப்பட்டியல்

(a) உற்றுநோக்கி நிரப்பும் வினாப்பட்டியல்

(b) ஆவண வினாப்பட்டியல்

(c) மதிப்பீட்டு வினாப்பட்டியல்

(d) வரையறுக்கப்பட்ட வினாப்பட்டியல்

19. கி.பி. 1873 இல் 24 ஒளிப்படக் கருவிகளைப் பயன்படுத்திக் குதிரை ஓடுவதை வெற்றிகரமாகப் படம் பிடித்தவர்?

(a) எட்டியென்-யூல்சு மரே

(b) எட்வர்டு முய்பிரிட்சு

(c) லூயிசு லே பிரிட்சு

(d) கிராப்சன்

20. பாண்டியர்களால் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட ____________ சிற்பம் ஒன்று வெட்டுவான் கோயிலில் உள்ளது.

(a) மிருதங்க தட்சிணாமூர்த்தி

(b) வீணாதர தட்சிணாமூர்த்தி

(c) வியாக்கியான தட்சிணாமூர்த்தி

(d) ஞான தட்சிணாமூர்த்தி

21. ஒளிப்படம் எடுக்கும் முறை கண்டறியப்பட்ட ஆண்டு

(a) கி.பி. 1820 (b) கி.பி. 1830

(c) கி.பி. 1840 (d) கி.பி. 1860

22. மெய்ம்மைகள், கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் இடம் பெறுவது

(a) நிர்வாகிகளுக்கான ஆய்வேடு

(b) ஆய்வாளருக்கான ஆய்வேடு

(c) பொதுமக்களுக்கான ஆய்வேடு

(d) திட்டம் உருவாக்கியவர்களுக்கான ஆய்வேடு

23. முனைவர் பட்ட ஆய்வேட்டின் பக்க வரையறை

(a) 200 பக்கங்கள் (b) 250 பக்கங்கள்

(c) 300 பக்கங்கள் (d) 350 பக்கங்கள்

24. சிக்கலைத் தீர்ப்பதற்கு முதலில் உருவாக்கிக் கொள்ளும் தீர்வு

(a) கருதுகோள் (b) அணுகுமுறை

(c) கிளைத் தலைப்பு (d) உட்தலைப்பு

25. ஆய்வேட்டை பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்

(a) இரண்டு (b) மூன்று

(c) நான்கு (d) ஐந்து

26. ஆய்வுரையின் உடற்பகுதி ____________ இடைவெளி விட்டுத் தட்டச்சு செய்யப்பட வேண்டும்.

(a) ஓரலகு (b) ஈரலகு

(c) நான்கலகு (d) ஐந்தலகு

27. அடிக்குறிப்பு ____________ இடைவெளி விட்டுத் தட்டச்சு செய்யப்பட வேண்டும்.

(a) ஓரலகு (b) ஈரலகு

(c) நான்கலகு (d) ஐந்தலகு

28. மேற்கோள்களை அளவு அடிப்படையில் ____________ பகுக்கலாம்.

(a) இரண்டாக (b) மூன்றாக

(c) நான்காக (d) ஐந்தாக

29. ஆய்வேட்டில் சுருக்கக் குறியீடு இடம் பெறுவது

(a) முதன்மைப் பகுதியில்

(b) முன்பகுதியில்

(c) பின்பகுதியில்

(d) பின்னிணைப்பில்

30. ஆய்வாளர் மேற்கொண்ட தன் முயற்சியின் சிறப்பினைக் காட்டுவது

(a) இயல் பகுப்பு (b) எடுத்துரைப்பு

(c) புறக்கட்டமைப்பு (d) பின்னிணைப்பு

31. உறுதிக்கூற்று : ஆய்வேட்டின் இன்றியமையாத பகுதிகளாகத் துணைநூற் பட்டியல் விளங்குகிறது.

காரணம் : ஆய்வு சிறப்பாக அமைவதில் அவை பெரும் பங்கு வகிக்கின்றன.

(a) உறுதிக்கூற்று சரி காரணம் தவறு

(b) உறுதிக்கூற்று காரணம் இரண்டும் சரி

(c) உறுதிக் கூற்று தவறு காரணம் சரி

(d) உறுதிக்கூற்று காரணம் இரண்டுக்கும் தொடர்பில்லை

32. இயல் முடிவில் அளிக்கக்கூடாத விவரங்கள் எவை ?

(a) புள்ளி விவரத்தொகுப்பு மற்றும் உலகறிந்த மெய்ம்மைகள்

(b) பாட்டு மற்றும் கோட்பாடுகள்

(c) (a) மற்றும் (b) இரண்டும் சரி

(d) (a) சரி (b) தவறு

33. நொடிக்குப் 12 தொடர் படங்களைப் பிடிக்கக்கூடிய ஒளிப்படக் கருவியைக் கண்டுபிடித்தவர்

(a) எட்டியென்-யூல்சு (b) எட்வர்டு முய்பிரிட்சு

(c) லூயிஸ் லீ பிரின்ஸ் (d) இயர்ல் காட்னர்

## பகுதி ஆ (7 × 6 = 24)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) இலக்கிய ஆய்வு வகைகள் குறித்தெகுதுக.

(அல்லது)

(b) சிக்கலை மையமிட்ட தலைப்புக் குறித்து விளக்குக.

35. (a) ஆய்வாளருக்குரிய தகுதிகள் யாவை?

(அல்லது)

(b) கருதுகோளின் வகைமை குறித்து எழுதுக.

36. (a) தரவுகளை ஒழுங்கு படுத்தும் முறைமையை விளக்குக.

(அல்லது)

(b) உற்றுநோக்கலின் வகைமை சுட்டி விளக்குக.

37. (a) சோதனை ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(b) நேர்காணல் உத்திகளை விளக்குக.

38. (a) மாதிரி ஆய்வில் வினாநிரலின் பங்களிப்பு பற்றியுரைக்க.

(அல்லது)

(b) கள ஆய்வின் போது ஆய்வாளர் பின்பற்ற வேண்டிய வழி முறைகள் யாவை?

39. (a) ஆய்வேட்டின் வடிவ வரையறையை விளக்குக.

(அல்லது)

(b) ஆய்வேட்டின் இயல் பிரிப்பை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. (a) பின்னிணைப்பில் இடம் பெறுவன யாவை? விளக்குக.

(அல்லது)

(b) அடிக்குறிப்பு அமைக்கும் முறையை விளக்கி எழுதுக.

———————